**நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2018**

---

## 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்று டனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(1) ஆம் பந்தி | உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப் பொறுப்பு நீதி அமைச்சு, தலைப்பு 110 இன் கீழ் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. ஆதலால் அதன் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவனால் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(1) ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | நிதியத்தின் மிகை நிதி தாமதமின்றி திரட்டு நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கபட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 9,600,818 தொகை நிதியத்தின் வங்கி நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 2018.12.31 ஆந் திகதி நடைபெற்ற நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப் பொறுப்பின் 04 ஆம் குழுக் கூட்டத்தின் போது கல்முனை, மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னருவ, தங்காலை, கம்பஹா, கேகாலை, காலி மற்றும் மொனறாகல ஆகிய மன்ற 9 வலயங்களுக்காக ரூபா 6,114,494.25 ஆன அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக பொறுப்பு சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதற்காக ஏற்படும் செலவினத்தை ஏற்பதற்கு நடைமுறைக் கணக்கில் எஞ்சிய மீதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.2 (ஆ) ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,530,408 மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 6,035,148 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 11,565,556 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டில் உட்கட்டமைப்பு வசதிகள் பராமரிப்பு செலவினம் ரூபா 12,140,658 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2007 யூலை 17 ஆந் திகதி நம்பிக்கை பொறுப்பு உறுதியொன்று மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த இந்நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 1(A) இன் பிரகாரம் மேல் நீதிமன்றங்களின் உத்தியோகபூர்வ விடுதிகள், பதிவேடுகள் மற்றும் வழக்குப் பொருட்கள் அறைகள், நீதிவான்களின் அறைகள், பதிவாளர் அலுவலகங்கள், நீதிவான்களின் நூலகங்கள போன்றவற்றை பராமரித்தல், தகவல் தொழில்நுட்பம், தளபாட உபகரணங்கள் போன்றவற்றிற்காக நிதியத்தை வழங்குதல் இந்நிதியத்தின் பிரதான நோக்கங்களாகவும் செயற்பணியாகவும் இருந்தது.<br>அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.<br>(அ) நிதியத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 10,000,000 தொகை நீதி அமைச்சிலிருந்து வழங்கப்பட்டிருந்ததுடன் நிலையான வைப்பு வட்டி பெறுவனவு ரூபா 60,874 தொகையுடன் மொத்த வருமான செலவினம் ரூபா 10,060,874 ஆக இருந்தது. மீளாய்வாண்டில் ரூபா 3,582,550 செலவிடப்பட்டு கொழும்பு மேல் நீதின்ற வலய அலுலவகங்களுக்கு உபகரணக் கொள்வனவு மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், மேற்குறித்த பிரதான நோக்கம் நிறைவேற்றப்படும் வகையில் பராமரிப்பு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் போது எந்தவொரு நீதிமன்ற வலயங்களினாலும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்படாதிருந்துடன், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தளபாட உபகரணங்களுக்காக மாத்திரம் வேண்டுகோள் விடப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் கொழும்பு நீதின்ற வலயத்திற்கு வழங்கப்பட்ட அலுவலக உபகரணங்களுக்கு மேலதிகமாக 2018.12.31 ஆந் திகதி நடைபெற்ற நம்பிக்கை பொறுப்பு கூட்டத்தின் போது 09 மேல் நீதிமன்ற வலயங்களுக்காக ரூபா 6,114,494.25 ஆன அலுவலக உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 1-(A) இன் பிரகாரம் பிரதான நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது நீதி நிர்வாக திணைக்களம் நீதிமன்ற வலயங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மூலதனச் சொத்துக்களை கையேற்பதற்காக ரூபா 120,000,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கருத்து தெரிவித்திருக்கவில்லை. | ஒரு நிறுவனத்தினால் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

அத்தொகையில் ரூபா 105,735,865 செலவிடப்பட்டு தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக இச்செயற்பாட்டிற்காக நிதியத்தின் மூலமும் ரூபா 3,582,550 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்பு சபை ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 04 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | பந்தியில் குறிப்பிட்பட விடயத்துடன் இணங்குகின்றேன் | நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்பு சபை ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டும் |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நோக்கி அடைந்து கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கீகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரை கிடைத்திருக்கவில்லை. | பந்தியில் குறிப்பிட்பட விடயத்துடன் இணங்குகின்றேன் | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக பொறுப்புச் சரபயின் அங்கீகாரம் மீளாய்வாண்டில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென |